DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 299/2026

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | ஆறுமுகம் |
|---|---|
| Father / Husband Name | ரங்கசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து சித்த மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோனவர் என் மனைவி. மாதம் ஞாபகமில்லை, போன வருடம் 20 ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் என் மனைவி அவருடன் வேலை செய்யும் அந்தோனி என்பவருடன் அந்தோனியின் இருசக்கர வாகனத்தில் அச்சிறுபாக்கம் கோவிலுக்கு சென்று மறுநாள் காலை 5.00 மணியளவில் திரும்பி வீட்டிற்கு வரும்போது கருங்குழி அருகே ஹார்டுவேர்ஸ் கடை எதிரே வரும்போது அவர்களுக்கு பின்னால் வந்த அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக அந்தோனி என்பவர் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். நான் தகவல் தெரிந்து வருவதற்கு முன்பு என் மனைவியை அருகே இருந்தவர்கள், செங்கல்பட்டு அரசு மருத்தவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துவிட்டார்கள். நான் சென்று பார்த்தபோது என் மனைவி தலையில் அடிப்பட்டு இறந்துபோய்விட்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். புகாரை என் மருமகள் எழுதினார். புகார் அளிக்க அந்தோனி என்னுடன் காவல் நிலையம் வந்தாரா என்றால் வந்தார். விபத்தில் இறந்த நபர் என்னுடைய மனைவி என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 299/2026

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தனுஷ் |
| Father / Husband Name | சுரேஷ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சாட்சி ஜெயராஜ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா3 ன் இரண்டாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 21.10.2025 ம் தேதி என்னுடைய நண்பர் அமர்நாத் என்பவரின் தாயார் அரசு பேருந்து மோதி விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அவரை பார்ப்பதற்காக நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்தேன். பின்னர் மதுராந்தகம் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு கையொப்பம் கேட்டார்கள் போட்டேன்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 21.10.2025 ம் தேதி காலை 11.00 மணிக்கு அந்தோனி என்பவரின் இருசக்கர வாகனத்தின் மீது அரசு பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் கல்பனா என்பவர் இறந்துவிட்ட தகவல் அறிந்து நான் விபத்து ஏற்பட்ட இடத்தை பார்க்க சென்றபோது போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள் என்றாலும், அதற்கு நான் சாட்சியாக இருந்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்திற்கு சாட்சியாக இருந்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 299/2026

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஜெயராஜ் |
| Father / Husband Name | அமலநாதன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். சாட்சி தனுஷ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா4 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 21.10.2025 ம் தேதி அமர்நாத் என்பவரின் தாயார் அரசு பேருந்து மோதி விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அவரை பார்ப்பதற்காக நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்தேன். பின்னர் மதுராந்தகம் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு கையொப்பம் கேட்டார்கள் போட்டேன்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 21.10.2025 ம் தேதி காலை 11.00 மணிக்கு அந்தோனி என்பவரின் இருசக்கர வாகனத்தின் மீது அரசு பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் கல்பனா என்பவர் இறந்துவிட்ட தகவல் அறிந்து நான் விபத்து ஏற்பட்ட இடத்தை பார்க்க சென்றபோது போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள் என்றாலும், அதற்கு நான் சாட்சியாக இருந்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்திற்கு சாட்சியாக இருந்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 299/2026
Miscellaneous :
Sessions : PW 5
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அமர்நாத் |
| Father / Husband Name | ஆறுமுகம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது குரோம்பேட்டையில் வசித்து ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன கல்பனா என்னுடைய தாயார். 20.10.2025 ம் தேதி என் அம்மாவுடன் பணிபுரியும் அந்தோனி என்பவருடன் அவரது Dio இருசக்கர வாகனத்தில் என் அம்மா அச்சிறுபாக்கம் கோவிலுக்கு சென்றுவிட்டு 21 ம் தேதி காலையில் திரும்பி வரும்போது கருங்குழி அருகே அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் அம்மாவுக்கு தலை மற்றும் உடல் முழுவதும் அடிபட்டு இறந்திருந்தார். அவரது பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள், அதற்கு நான் சாட்சியாக இருந்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணை செய்தபோது இறந்துபோன கல்பனா என்பவர் என்னுடைய தாயார் என்பதை சொன்னேனா என்றால் சொன்னேன். விபத்தில் இறந்த நபர் என்னுடைய அம்மா என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 299/2026

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | திலீப்குமார் |
| Father / Husband Name | சிவலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருமாரபாக்கம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன கல்பனா என்னுடைய அக்கா. 20.10.2025 ம் தேதி என் அக்கா அவருடன் வேலை செய்யும் அந்தோனி என்பவருடன் Dio இருசக்கர வாகனத்தில் அச்சிறுப்பாக்கம் கோவிலுக்கு சென்று மறுநாள் 21.10.2025 அன்று திரும்பி வரும்போது கருங்குழியில் உள்ள ஸ்ரீஜெயராம் எலக்ட்ரிக்கல் ஹார்டுவேர்ஸ் கடையின் அருகே என் அக்கா சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் அம்மாவுக்கு தலை மற்றும் உடல் முழுவதும் அடிபட்டு இறந்திருந்தார். அவரது பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள், அதற்கு நான் சாட்சியாக இருந்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அந்தோனி என்பவரை பார்த்தேனா என்றால் இல்லை. நான் மதுராந்தகம் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் என்னுடைய அக்கா என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.